பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 32

சனிக்கிழமை
28 டிசெம்பர் 2024

மார்கழி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## ஐ.தே.க.வை அழிப்பதற்கு விடமாட்டேன்

கொழும்பு, டிசெ. 28
ஐக்கிய தேசியக் கட்சியை ஒருசிலர் பணயக் கைதியாக பயன்படுத்த முற்படு 11

# தமிழரசுக் கட்சியின் தலைவர் நானேதான்

## மத்திய குழுவுக்கு மாவை வைத்த 'செக்'



யாழ்ப்பாணம், டிசெம்பர் 28
தமிழரசின் தலைவராக உள்ள மாவை சேனாதிராஜாவின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்று தீர்மானிப்பதற்காக, கட்சியின் மத்திய குழுக்கூட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில், தானேதான் தலைவர் என்றும், இந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் தேவையற்றது எனவும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். 11

பரபரப்புக்கு மத்தியில்

## தமிழரசின் மத்திய குழு இன்று கூடுகின்றது!

வவுனியா, டிசெ. 28
உச்சக்கட்டப் பரபரப்புக்கு மத்தியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது.
தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் 11

தமிழரசின்

## மத்திய குழுவில் இல்லாதோர் வாக்களிக்கத் தகுதியற்றோரே

### துணைத்தலைவர் சிவமோகன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 28
தமிழரசுக் கட்சியின் இன்றைய மத்திய குழுக்கூட்டத்தில், பார்வையாளர்களாகக் கலந்துகொள்ளும் எவரும் வாக்களிக்க முடியாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைத்தலைவர் மருத்துவர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சத்தியலிங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தி 11

வெடுக்குநாறிமலையில்

## நிம்மதியான வழிபாட்டுக்கு வழிவகைகள் ஏற்படுத்துக!

### ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

வவுனியா, டிசெ. 28
வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் தமிழர்கள் நிம்மதியாகவும், அமைதியாகவும் தங்களின் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளு 11

கிளிநொச்சியில்

## 18,602 பயனாளிகளுக்கு நலன்புரிக் கொடுப்பனவு!

கிளிநொச்சி, டிசெ. 28
கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரையான காலப்பகுதியில் 18 ஆயிரத்து 602 பயனாளிகளுக்கு ஆறுதல் நலன்புரிக் கொடுப்பனவு பிரதேச செயலகங்களால் வழங்கப்பட்டுள்ளன.
இதன்படி, கரைச்சி, கண்டாவளை, பூநகரி 11

## தேசியப் பொங்கல் விழா தெல்லிப்பழையில்!

யாழ்ப்பாணம், டிசெ. 28
2025ஆம் ஆண்டுக்கான தேசியப் பொங்கல் விழாவை யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையில் நடத்துவதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.
தேசியப் பொங்கல் விழா தொடர்பான கலந்துரையாடல் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் 11

வவுனியா நகரில் காணி

## புலனாய்வுப் பிரிவின் கோரிக்கை நிராகரிப்பு

வவுனியா, டிசெ. 28
தேசியப் புலனாய்வுப் பிரிவுக்கு அலுவலகம் அமைப்பதற்காக, வவுனியா நகரப் பகுதியில் காணி கோரப்பட்ட நிலையில், அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.
வவுனியா வடக்குப் 11

## இராணுவ முகாம்களுக்குக் காணி: மேய்ச்சல் தரைகளுக்கு இல்லை!

### அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் பொதுமக்கள் சுட்டிக்காட்டு

வவுனியா, டிசெ. 28
வவுனியாவில் உள்ள பெரும் காடுகளில் ஏக்கர் கணக்கான காணிகளை அழித்து இராணுவத்தினர் முகாம்களை அமைத்துள்ளனர். ஆனால், மேய்ச்சல்தரைகளை அமைப்பதில் அக்கறை காட்டப்படவில்லை என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போதே, பொதுமக்களால் இவ்வாறு 11

விவசாய நவீனமயமாக்கல்

## 91 விவசாயிகளுக்கு ரூ.25 மில். ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிசெ. 28
விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 91 விவசாயிகளுக்கு 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயல 11




'வீட்டுக்கட்சியை இனி ஆர் வந்தாலும் காப்பாத்த ஏலாது கண்டியளோ'

## அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை

### மீன்பிடி அமைச்சர் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 28
அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் எந்தவொரு சமரசப் பேச்சுவார்த்தைக்கும் நாங்கள் தயாரில்லை என்று கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர், 'ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்குப் பயணம் மேற் 11

## நாணயநிதியத்தின் தாளத்துக்கு ஆடுகின்றது அரசாங்கம்!

### விளக்குமாறை ஏந்தியபடி சீலரத்ன தேரர் எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 28
சர்வதேச நாணயநிதியத்தின் தேவைக்கேற்பவே தற்போதைய அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என்று பத்தரமுல்லே சீலரத்ன தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்பளங்கள் நாட்டை வளப்படுத்தும்

### மொறட்டுவ பல்கலை விரிவுரையாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 28

**உப்பளங்களை உருவாக்குவதற்கு வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் பொருத்தமானவை. உப்பளங்களை உருவாக்குவதன் மூலம் இளைஞர் - யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதோடு நாட்டின் பொருளாதாரத்தையும் வளப்படுத்தலாம்.**

-இவ்வாறு மொறட்டுவ பல்கலைக் கழக இரசாயனவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மகின் சசா ரத்நாயக்க தெரிவித்துள்ளார். வருடாந்தம் எமக்கு இருபது இலட்சம் மெற்றிக்தொன் உப்புத்தேவைப் படுகிறது. ஒன்றரை இலட்சம் தொடக்கம் ஒரு இலட்சத்து எழுபதாயிரம் மெற்றிக் தொன் உப்பு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது மிகுதி இறக்குமதி செய்யப்படுகிறது.

குறிஞ்சாத்தீவு வரலாற்று ரீதியாக உப்பு உற்பத்தி செய்யப்பட்ட பிரதேசம். யுத்தம் காரணமாக இந்த உப்பளம் மூடப்பட்டுள்ளது. இங்கு ஆயிரம் ஏக்கரில் உப்பு உற்பத்தி செய்யலாம். செம்மணியிலுள்ள உப்பளமும் மூடப்பட்டுள்ளது. இந்த நிலையில் அரசாங்கம் உப்பை இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளது. வெளிநாடுகளில் உப்பளங்கள் பசுமை சுற்றுலா மையங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு பறவைகள் சுயாதீனமாக வந்து செல்லும் எம் நாட்டில் அப்படியில்லை - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

## வடக்கின் சுகாதாரத்துறையில் மூலோபாயத் திட்டம் இல்லை

### மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.28

வடக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறை தொடர்பில் மூலோபாயத் திட்டங்கள் இல்லை என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விதான பத்திரண ஹாலகே சமன் தர்மசிறி பத்திரண தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கில் சுகாதாரத்துறை தொடர்பான மூலோபாயத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தயாராக உள்ளோம் என்றும், அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார்.

*(நேற்றைய உதயனில் பிரசுரமான இதுதொடர்பான செய்தியில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரும், ஒளிப்படமும் தவறாகப் பிரசுரமாகிவிட்டது. அதனால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம்.)* (எ-இ)

## பொது ஒழுங்கு பேண முப்படைக்கு அழைப்பு

கொழும்பு, டிசெ. 28

நாடளாவிய ரீதியில் அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும் பொது ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக ஆயுதப்படையினரை அழைக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் அனைத்து பாதுகாப்புத் தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கும் உத்தரவு அடங்கிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார். (ச-இ)

## தன்னிச்சை இடமாற்றங்கள் எதிர்க்கட்சியினர் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.28

மத்திய மற்றும் மாகாணசபை மட்டங்களில் மேற்கொள்ளப்படும் தன்னிச்சையான இடமாற்றங்களை விசாரிக்க எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஒரு சிறப்புப் பிரிவை நிறுவியுள்ளது.

மத்திய மற்றும் மாகாணசபைத் துறைகளில் ஏற்றுக்கொள்ளமுடியாத மற்றும் நியாயமற்ற காரணங்களுக்காக சேவை நிலையங்களுக்கு இடையில் அரசு அதிகாரிகளை இடமாற்றம் செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே இவ்வாறான தன்னிச்சையான இடமாற்றங்களையும் உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தையும் மாகாணசபை அதிகாரிகளையும் வலியுறுத்தியுள்ளது. (ச-இ)

## ஆசிரியர் இடமாற்றங்களில் செல்வாக்கு இனியிருக்காது

### வன்னி மாவட்ட எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 28

வவுனியா நகரப் புறத்தில் இருக்கும் ஆசிரியர்களுக்கு செல்வாக்கைப் பயன்படுத்தி இடமாற்றங்களை வழங்குகின்றனர். இது தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூடுதலான அதிகாரிகள் வவுனியா நகரப் புறத்தில் இருக்கும் ஆசிரியர்களைக் காப்பாற்றி செல்வாக்கை பயன்படுத்தி இடமாற்றங்களை வழங்குகின்றனர். எதிர்வரும் காலங்களில் இது தொடர்பாக நாம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். செட்டிகுளம் பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. நகர்ப்புறப் பாடசாலைகள் பலவற்றில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளனர். ஏன் நகர்ப்புறப் பகுதியில் உள்ள ஆசிரியர்களை பின்தங்கிய பிரதேசத்துக்கு அனுப்ப முடியாமல் உள்ளது. செட்டிகுளம் பிரதேசத்தில் கடமையாற்றும் சில ஆசிரியர்கள் 8 வருடம் முடிந்தும் இடமாற்றம் வழங்கப்படாதுள்ளனர். ஆனால் நகர்ப்புறப் பாடசாலைகளில் குறிப்பிட்ட சில ஆசிரியர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளுக்கே சுழற்சி முறையில் இடமாற்றமாகி செல்கின்றனர். எதிர்வரும் காலங்களில் இது தொடர்பாக நாம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டி வரும் - என்றார். (ச-18,110)

## பொருள்களுக்குத் தட்டுப்பாடு சில மாதங்கள் நீடிக்கும்



கொழும்பு, டிசெ.28

அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடு மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் என மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதியமைச்சர் ருவன் செனரத் நேற்று தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். இது தொடர்பான தெளிவுகளை நாங்கள் பெற்றுள்ளோம். இதற்கான பொறுப்பைக் கடந்த அரசாங்கமே ஏற்க வேண்டும்.

நாங்கள் ஆட்சியைப் பொறுப்பேற்கும் போது பெரும்பாலான நெல் களஞ்சியசாலைகள் தனியாரிடமே இருந்தன. இந்த நிலைமையை சீர்செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## சாரதிகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.28

குடிபோதையில் வாகனம் செலுத்தினால் கைதுசெய்யப்படும் சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திரத்தை ஓராண்டுக்கு இடைநிறுத்துமாறு அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்தை ரத்துச் செய்யுமாறு நீதிமன்றில் கோருவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுபோதையில் சாரதிகள் அடிக்கடி வாகனங்களை செலுத்துவதை அவதானிக்க முடிகிறது. இதனால் அநியாய உயிர்ப்பலிகள் நிகழ்கின்றன.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அரசியல் தலையீட்டாலேயே மருந்துத் தட்டுப்பாடு

கொழும்பு, டிசெ.28

நாட்டில் தரம் குறைந்த மருந்துகள் இல்லையெனவும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவவில்லை என்றும் அரச மருந்து சட்டபூர்வமாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் தலைவர் மருத்துவர் மனோஜ் வீரசிங்க தெரிவித்துள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார். தற்போதுள்ள நிலையற்ற தன்மைகள் மற்றும் அரசியல் தலையீடுகள் மருந்துக் கொள்வனவு நடவடிக்கையை நேரடியாகப் பாதித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சிறுபான்மையினரை புறக்கணிக்கக்கூடாது

## தேசிய சமாதானப்பேரவை வலியுறுத்து

**கொழும்பு, டிசெ. 28**

**சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்கள் பூர்வீகமாக வாழும் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் தமது பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பை ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் இரண்டிலும் அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர். எனவே சிறுபான்மையினரின் நம்பிக்கையை கட்டியெழுப்பும் வகையில் அரசாங்கம் செயற்பட வேண்டுமென தேசிய சமாதானப்பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:- ஜனாதிபதியால் உருவாக்கப்பட்ட 'தூய இலங்கை' செயலணிக்கு சிறுபான்மை தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் உள்வாங்கப்பட வேண்டும்.

ஒரு பல்லின, மத சமுதாயத்தில் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவருவதும், உள்வாங்குவதும் அத்தியாவசியமானது. அது ஓர் அடையாளமாக இருக்கக்கூடாது.

சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால் சிறுபான்மை சமூகங்களை புறக்கணிக்கும் அபாயம் உள்ளது. வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் நீண்டகாலமாக மோசமான ஒடுக்குமுறைகளை சந்தித்து வருகின்றனர். எனவே அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அர்த்தமுள்ளதாக்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றுள்ளது. (ரி-6)

# முட்டை விலை சரிவு



யாழ்ப்பாணம், டிசெ. 28

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு யாழ். குடாநாட்டுக்கு பெரும் எண்ணிக்கையான முட்டைகள் எடுத்துவரப்பட்டுள்ள நிலையில் அவற்றின் விலை கணிசமான அளவு சரிவடைந்துள்ளது. ஒரு முட்டை 26 ரூபா முதல் 28 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. (ச-17)

# டிப்பர் தூக்கிவீசி பொலிஸ் சாவு!

யாழ்ப்பாணம், டிசெ. 28

ஹபரணை - திருகோணமலை வீதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக எத்திமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். வீதியில் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்தபோது டிப்பர் வாகனமொன்றில் மோதி, வீதியில் தூக்கி வீசப்பட்டு எதிர்த்திசையில் பயணித்த லொறி மற்றும் கார் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# திருமலைக் கடலில் ஆளில்லா விமானம்

திருகோணமலை கடலில் சிறிய ரக ஆளில்லா விமானம் ஒன்று மிதப்பதை நேற்றுமுன்தினம் அவதானித்த மீனவர்கள் வழங்கிய தகவலையடுத்து கடற்படையினர் குறித்த விமானத்தை மீட்டு அதனை கரைக்குக் கொண்டுவந்தனர் என விமானப்படை ஊடகப் பேச்சாளர் குரூப் கப்டன் எரந்த கிகனகே தெரிவித்துள்ளார். இந்த விமானம் எப்படி வந்தது? என்று விசாரணை நடத்த விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# கதிரியக்க வல்லுநர்கள் பற்றாக்குறை

கொழும்பு, டிசெ. 28

அரச மருத்துவமனைகளில் கிட்டத்தட்ட 530 கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் பற்றாக்குறை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான தகவலை அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம வழங்கியுள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட கதிரியக்க நிபுணர்களாக 1,150 பணியாளர்கள் இருக்கவேண்டும். ஆனால் தற்போது கிட்டத்தட்ட 620 பேர் பணி புரிகின்றனர்.

2 ஆண்டுகளுக்கும் மேலாக கதிரியக்க நிபுணர்கள் பணியமர்த்தப்படாததால், நோயாளிகளுக்கு சிகிச்சை மற்றும் பரிசோதனை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)




எரியிற வீட்டில பிடுங்கினவரை லாபம் தான். ஆனால் அப்பிடி எரியிற வீட்டில பிடுங்காமல் நெருப்பை நூர்க்கிறதுதான் மனிசருக்கு அழகு. எரிஞ்சு கொண்டிருக்கிற வீட்டுக்கட்சியிலையும் எல்லாரும் இன்னும் அதுக்குள்ள எண்ணெயை ஊத்தி எரியவைக்கிறதிலதான் குறியா இருக்கினமே தவிர, அந்த நெருப்பை நூர்க்கிறமாதிரி ஒருத்தரும் இல்லை. ஏட்டிக்குப் போட்டியா கட்சியின்ர யாப்பைத் தூக்கிக்கொண்டு ஆளையாள் அடிச்சு அமத்துறதும் வீட்டுக்கட்சியில இப்ப வழக்கமாப் போட்டுது. இந்த யாப்பை தூக்கிப் பிடிக்கிறது, அதை வைச்சு மற்றவையின்ர வாயை அடைக்கிறது, தங்களுக்குப் பிடிக்காத ஆக்களை கட்சியை விட்டு ஓரம் கட்டுறது எண்டு இவ்வளவுநாளும் ஒரு கும்பல் தான் விளையாட்டுக் காட்டிக்கொண்டிருந்தது. கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வந்தமாதிரி, இப்ப அதே யாப்பில இருக்கிற விசயங்களை வைச்சு இவ்வளவு நாளும் விளையாட்டுக்காட்டினவைக்கே ஆப்புவைச்சிருக்கு இன்னொரு குழு.

வன்னித்தொகுதியில முந்தி எம்.பி.யா வீட்டுக்கட்சியில தெரிவான டாக்குத்தர் தான், இப்பிடியொரு இடியை இறக்கியிருக்கிறார். ஏற்கனவே தமிழரசுக் கட்சியின்ர மத்தியகுழு தன்ர அதிகாரத்தை மீறி தீர்மானம், நடவடிக்கை எடுக்கிறதால அந்தக் கூட்டங்களுக்கு தடை போடவேணும் எண்டும் போன கிழமைதான் வழக்குப் போட்டு முதல் இடியை குடுத்தார். இப்ப என்னெண்டால் ' மத்திய குழுவில இல்லாதவை அந்தக் கூட்டத்துக்கு வந்து கதைக்கவும் கூடாது, வாக்களிக்கவும் உரிமையில்லை எண்டு யாப்பில இருக்கு. அதால அப்பிடியான ஆக்களுக்கு கூட்டத்துக்கு அனுமதி குடுக்கக்கூடாது' எண்டு கடிதமொண்டை தன்ர லோயர் மூலம் அனுப்பி இருக்கிறார். அப்பிடி அவர் குறிவைச்சிருக்கிறது மட்டக்களப்பு மல்லியைத்தானாம்.

இப்ப இருக்கிற மத்தியகுழு 2019 ஆம் ஆண்டு பொதுச்சபையால தெரிவானது. எம்.பி.யா தெரிவாகிறவைக்கும் மத்தியகுழுவில இடமிருக்கு. ஆனாலும் பொதுச்சபை அங்கீகரிக்கோணுமாம். 2020 ஆம் ஆண்டுதான் மட்டக்களப்பு மல்லி, வீட்டுக்கட்சியில வெண்டு எம்.பி.யானவர். அதால அவரை இன்னும் பொதுச்சபை மத்தியகுழு உறுப்பினரா அங்கீகரிக்கேலை. அப்பிடி மத்தியகுழுவில இடமேயில்லாத ஒருத்தர், தலைவரை மாத்தோணும் எண்டுறதும், அவருக்கு இருக்க இடம் குடுக்கக்கூடாது எண்டுறதும், மாவையருக்கு எதிராக வாக்கெடுப்பு நடத்தோணும் எண்டுறதும் பிழைதானே. யாப்பில இருந்த இந்த விசயத்தை எப்பிடியோ கண்டுபிடிச்சு, இப்ப மட்டக்களப்பு மல்லியின்ர கொட்டத்தை அடக்க அவசரமா இப்பிடியொரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கு. இந்தக் கடிதத்துக்கு என்ன மாதிரி எதிர்வினை இருக்கப் போகுதெண்டதும், வீட்டுக்கட்சி இன்னும் எத்தினை துண்டா உடையப் போகுது எண்டும் வவுனியாவில இண்டைக்குத் தெரிஞ்சிடும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மேஷராசி அன்பர்களே! மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணை வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படக்கூடும்.

**இடபம்:** ரிஷபராசி அன்பர்களே! காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய் வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** மிதுனராசி அன்பர்களே! மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**கடகம்:** கடகராசி அன்பர்களே! புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** சிம்மராசி அன்பர்களே! உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**கன்னி:** கன்னிராசி அன்பர்களே! பணப்புழக்கம் அதிகரிக்கும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்து சேரும். சிலருக்கு கோயில்களுக்குச் சென்று வேண்டுதல்களை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**துலாம்:** துலாராசி அன்பர்களே! மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். கணவன் உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** விருச்சிகராசி அன்பர்களே! இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படும்.

**தனுசு:** தனுசுராசி அன்பர்களே! தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** மகரராசி அன்பர்களே! இன்றைக்கு உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள்.

**கும்பம்:** எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மாலையில் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வருவீர்கள்.

**மீனம்:** மீனராசி அன்பர்களே! இன்று பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். சிலருக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும்.

# நாவலர் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், டிசெ. 28

கைதடி சைவ ஐக்கிய சங்கம் பெருமையுடன் நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழா கைதடி சைவ ஐக்கிய சங்கத்தில் கைதடி ஐக்கிய சங்கத் தலைவர் வ. ஆறுமுகநாதன் தலைமையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் ஆறுமுகநாவலர் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கான பரிசளிப்பும் சான்றிதழ் வழங்கலும் இடம் பெறவுள்ளன. (ச-22,159)



# ஈழத்து சபரிமலையில் கறுப்பண்ணசாமி பூசை

யாழ்ப்பாணம், டிசெ. 28

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். கோண்டாவில் ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகரயோதி மண்டலத்தின் கறுப்பண்ணசாமி பூசை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

விநாயக வழிபாட்டுக் கிரியைகள் ஆரம்பமாகி, கருவறையில் வீற்றிருக்கும் ஐயப்பனுக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்றதைத் தொடர்ந்து 18 படி பூசைகள் இடம்பெற்று வசந்த மண்டபத்தில் அருள் பாலிக்கும் ஐயப்பனுக்கும் தீபாராதனைகள் இடம் பெற்றன. 108 ஐயப்பன் தோத்திர மந்திரங்கள் குரு சாமிமார்கள், சிவாச்சாரியாரினால் ஓதப்பட்டு ஐயப்பனின், கறுப்பண்ணசாமி வீதியுலா வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். (ச-45-27)



அனலைதீவு மகா விஷ்ணு கோவிலில் சொர்க்கவாசல் ஏகாதசி பூஜை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-25 -9)

# மார்கழி இசை விழா 2 ஆம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ். இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் மற்றும் யாழ். வணிகர் கழகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மார்கழி இசைவிழா நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நாளை ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

2 ஆம் நாள் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று சனிக்கிழமை நடைபெறும். பி.ப. 5.10 க்கு இந்தியன் கோர்னர் இசைப்பிரிவு மாணவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்தும், பி.ப. 5.20 க்கு யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரனின் திருநிறை வழங்கலும், பி.ப. 5.30 க்கு இளம் தவில், நாதஸ்வர வித்துவான்களின் இசைச்சங்கமமும், பி.ப. 6.30 க்கு திருமதி கவிதா வாமதேவனின் 'விரலிசை கானங்கள்' நிகழ்வும், இரவு 7.10 க்கு சிவஸ்ரீ விஸ்வபிரசன்ன குருக்களின் தெய்வீக இசையரங்கும், இரவு 7.40 க்கு கே.பி. குமரனின் நாத சங்கமமும், இரவு 8.40 க்கு யாழ். பல்கலை நடனத்துறை மாணவர்களின் 'கடல்கோள் கடந்த தமிழர்' எனும் நாட்டிய நாடகமும் இடம் பெறவுள்ளன. (ச-25, 10 )

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 28

கலாபூஷணம் சி. சிவானந்தராஜாவின் நவாலியூர் க. சோமசுந்தரப் புலவரும் அவர் இயற்றிய பிரபந்தங்களும் நூல் வெளியீட்டு விழா பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் ஆய்வாளரும் ஓய்வுநிலை விரிவுரையாளருமான கலாநிதி ந. இரவீந்திரன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-22,159)

# கூட்டுறவுச்சங்க ஒளிவிழா இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 28

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் நடத்தும் ஒளிவிழா நிகழ்வு இன்று சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு சங்கத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சு. ஜித்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பணியாளர் கௌரவிப்பு, சிறுவர்களுக்குப் பரிசில் வழங்கல் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இம்பெறவுள்ளன. (ச-17)

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.28

நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெற்றது. சிறப்பு அபிஷேகப் பூசைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து மகேசுவரர் பூசையும் இடம்பெற்றது. (ச-45-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

சூரிய உதயத்தை பார்த்தபடியே எப்போதும் நில் அப்போது தான் நிழல் உனக்குப் பின்னால் விழும்.

– சூரிவால்ட் விட்மன் –


# என்று தணியும் இனவாதத் தீ!

தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவப் பாதுகாப்பு அரண்கள் நீக்கப்பட்டுள்ளன. இந்தச் சுதந்திரமான நிலையைப் பயன்படுத்தி சூழ்ச்சிகள் நடக்கலாம். எனவே, இதுதொடர்பில் அரசாங்கம் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என்று எச்சரித்திருக்கின்றார் சுமணரத்ன தேரர். தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்த நாள்முதல் வடக்கு கிழக்கில் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது என்றும், நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் ஒரு தோற்றப்பாடு வலிந்து ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் தொடர்ச்சி தான் சுமணரத்ன தேரரின் கருத்து. அத்துடன், சுமணரத்ன தேரர் போன்ற பேர்வழிகளிடம் இருந்து இதைத்தான் எதிர்பார்க்கலாம். இத்தகைய கருத்துருவாக்கங்கள் மூலம், அச்சப்பாடுகளைத் தோற்றுவித்து 'தேசியப் பதற்றநிலையை' ஏற்படுத்துவதில் அவர்கள் காலாதிகாலமாக வல்லவர்களாகவே இருந்து வருகின்றனர்.

சுமணரத்ன தேரரும், இன்னும் சிலரும் தெற்கில் தெரிவிப்பதுபோன்று வடக்கு - கிழக்கில் இருந்து இராணுவப் பாதுகாப்பு முற்றாக நீக்கப்படவில்லை. ஓரிரு வீதித் தடைகளை அநுர அரசாங்கம் நீக்கியிருக்கின்றதே அன்றி, அதற்கு அப்பால் சென்று இராணுவ முகாம்களை நீக்கியதாக எந்தப் பதிவும் இல்லை. வடமராட்சி உள்ளிட்ட பல பகுதிகளில் தனியாரின் காணிகளுக்குள் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள்கூட இன்றளவும் அப்படியேதான் தொடர்கின்றன. இன்னும் சொல்லப்போனால், வார்த்தைகளால் வடக்கு-கிழக்கைக் கட்டிப்போடுவதில் ரணிலுக்கே வழிகாட்டக்கூடியவராகத்தான் ஜனாதிபதி அநுர செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். உண்மை நிலை இவ்வாறிருக்கையில், வடக்கு - கிழக்கில் எவ்வாறான பாதுகாப்புக் குறைப்பை -இராணுவக் குறைப்பை தேசிய மக்கள் சக்தியினர் முன்னெடுத்துள்ளனர் என்ற தெளிவூட்டலை சுமணரத்ன தேரர் வழங்கியாகவேண்டும்.

இலங்கையில் இன்று அசைக்க முடியாத பெரும் பூதமாக இனவாதம் வேரூன்றியிருக்கின்றது என்றால், அதற்கு இவ்வாறான அர்த்தமற்ற பரப்புரைகளே பிரதான காரணம். கடந்த 70 ஆண்டுகளாகத் தேவையற்றுத் திணித்துவந்த இனவாதத்தீ இந்தத் தீவை குருதிச் சகதியில் தள்ளி திவால் நிலையை அடையச் செய்தது நூற்றாண்டுகால பொருளாதாரப் பேரிழப்பை ஏற்படுத்தியது - இனங்களுக்கு இடையே விரிசலைக் கொண்டு வந்தது. 'அத்தனையும் கடந்த பின்னரும், ஒரு பூ பூப்பதுபோல்' இலங்கை மெல்லத் தவண்டு நிமிர்ந்து மேலெழுந்து கொண்டிருக்கையில் இவ்வாறான இனவாதப் பேச்சுகள் எல்லாம் கலப்பற்ற அபத்தமே.

உண்மையில் இந்தக் கருத்துகள் தமிழர்களை வஞ்சிக்காது. ஏனெனில், இந்த வன்மத் திணிப்பின் உச்ச வரையறையை அனுபவித்து மீண்டவர்கள் தான் தமிழர்கள். ஆனால், தமிழர்களை வஞ்சிப்பதாய் நினைத்து தம் சொந்த மக்களின் நலன்களைத்தான் சுமணரத்ன தேரர் தரப்பினர் தவிடுபொடியாக்கிக் கொண்டிருக்கின்றனர். இந்தத் தீவின் மீது இவர்களுக்கு இருக்கும் ஆத்மார்த்தமான அக்கறையின் வரையறை அவ்வளவு தான். இந்தப் புரிதலை சிங்கள சகோதரர்கள் உய்த்துணரவேண்டும்.




அஸ்வெசுமவின் கீழ்

## மாணவர்களுக்கு உதவித்தொகை

**கொழும்பு, டிசெ. 28**

**அஸ்வெசும பயனாளர் குடும்பத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கும், அஸ்வெசும கொடுப்பனவு பெறாது ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களின் மாணவர்களுக்கும் 6 ஆயிரம் ரூபா நிவாரணத் தொகை வழங்கப்படும். கல்வி அமைச்சின் ஊடாக இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என நிதி பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியபெரும தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- பொருளாதாரத் தாக்கத்தால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பொருளாதார மீட்சிக்கான திட்டங்களுடன் அவதானத்துக்குரிய தரப்பினருக்கு நிவாரணம் வழங்கும் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

பிள்ளைக ளின் கல்வி மீதான சுமையைக் குறைப்பதற்கு அரசாங்கம் சிறந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. இதற்கமைய 'அஸ்வெசும' பயனாளர்களின் குடும்பங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் பாடசாலை தவணையை முன்னிட்டு பாடசாலை கற்றல் உபகரணங்கள் பெற்றுக் கொள்வதற்கு நிவாரணத் தொகை வழங்கப்படவுள்ளது - என்றார். (ச-இ)

## இவ் வருடத்தில் 2 மில்லியன் சுற்றுலாவிகள்

கொழும்பு, டிசெ. 28

2024 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் இரண்டு மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. தாய்லாந்தில் இருந்து வருகை தந்த தம்பதியொன்றே சுற்றுலாப் பயணிகளின் இரண்டு மில்லியன் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, டிசெ.28

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. சில இடங்களில் மாலை அல்லது இரவுவேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படக்கூடும். என்றும் வளிமண்டலவியல் திணைக்களம், கூறியுள்ளது. (ச-இ)

## மக்கள் நேயத்துடன் தொடருந்து சேவை

கொழும்பு, டிசெ. 28

தொடருந்து சேவையை மக்கள் நேய சேவையாக மாற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளதாக தொடருந்து சேவை பொது முகாமையாளர் தம்மிக ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

தன்னை மீண்டும் பொது முகாமையாளராகத் தெரிவு செய்தமைக்காக அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்த தம்மிக ஜெயசூரிய, தொடருந்து சேவை மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்துள்ளது எனவும் அரசாங்கம் தொடருந்து சேவையை தினசரி போக்குவரத்துச் சேவையில் 70 வீதம் பூர்த்தி செய்யும் சேவையாக மாற்றத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ச-6)



## எம்.பி.களுக்கு வாகனம் இதுவரை முடிவில்லை

கொழும்பு, டிசெ.28

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களை வழங்குவதற்கு தீர்மானம் எடுத்துள்ளோம். ஆனால் அவர்களுக்கு எப்போது வாகனங்கள் வழங்கப்படும் என்பதை நாங்கள் முடிவு செய்யவில்லை என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். தற்போது பெரும்பாலான எம்.பி.க்கள் சொந்த வாகனங்களையே பயன்படுத்துகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களை வழங்குவதற்குத் தீர்மானம் எடுத்துள்ளோம்.

அதேவேளை சொகுசு வாகனங்களை ஏலம் விடுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தற்போது மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ச-இ- 6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மீன்பிடிச் சட்டவரைவு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, டிசெ. 28

**இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பான சட்டங்களை வலுப்படுத்தும் வகையில் புதிய திருத்தத்தை வரைவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.**

1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மீன்பிடிச் சட்டம் இதுவரை 8 முறை திருத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தை ரத்துச் செய்து புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த பல முறை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அது தொடர்பான பணிகள் இன்னும் முடிக்கப்படவில்லை. இலங்கை கடற்பரப்பிலும் ஆழ்கடலிலும் சட்டவிரோதமான, மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பான சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் தொழில்நுட்ப உதவியுடன், மீன்பிடி அமைச்சு அதிகாரிகள், சட்ட வரைவுத்துறை, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் அடங்கிய குழுவால் ஒரு முதற்கட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி முதற்கட்ட வரைவின் அடிப்படையில் புதிய சட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு சட்ட வரைவாளருக்கு அறிவுறுத்துவதற்காக மீன் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (ச-6)

## தனியார் மருத்துவமனை பிரச்சினைகளுக்குத் தீர்வு

கொழும்பு, டிசெ. 28

தனியார் மருத்துவமனைகளில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தனியார் மருத்துவமனைகளில் நோயாளர்கள் சிகிச்சை பெற்றுக்கொள்ளும்போது பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவற்றை தனியார் மருத்துவமனை உரிமையாளர்களுடன் பேசித் தீர்த்து வைக்கவுள்ளோம்.

தனியார் மருத்துவமனைகள் மட்டுமல்ல மருந்து விற்பனை நிலையங்களையும் ஒழுங்குபடுத்தவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

## பாலியல் துன்புறுத்தல் பொலிஸுக்கு மறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 28

பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் அருகாமையில் உள்ள தையலகமொன்றில் யுவதியொருவரிடம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டதாகத் தெரிவித்து காங்கேசன்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவரை கடந்த புதன்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபொழுது சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ச-125)

## இலங்கையில் அரிய நோய்

கொழும்பு, டிசெ. 28

இலங்கையில் முதன்முறையாக 'கொஞ்சனெட்டல் மெத்தமோகுளோபினீமியா' என்ற மிக அரிதான நோய் கண்டறியப்பட்டுள்ளது.

மதவாச்சிப் பகுதியிலுள்ள குழந்தையொன்றே இந்த அரிய நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவு விசேட மருத்துவ நிபுணர் எம். ஆர். எஸ்.யு. சி. ரணவக்க குறிப்பிட்டுள்ளார். உடல் நீல நிறமாக மாறுவதும், சுவாசிப்பதில் சிரமம் ஏற்படுவதும் இந்த நோயின் அறிகுறிகள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையின் மருத்துவ வரலாற்றிலேயே ஒரு நோயாளிக்கு மெத்தமோகுளோபினீமியா கண்டறியப்பட்டது இதுவே முதல் முறை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவர்

### ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 28

விவசாயிகளின் பொருள்களின் உற்பத்தித் தரத்தை மேம்படுத்துவதுடன் அவர்களுக்கான சந்தை வாய்ப்பை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக பெருமளவான விவசாயிகளை ஊக்கப்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தமுடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

முன்னைய காலங்களில் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போது அவை அருகிச் செல்கின்றன. அதிகளவான விவசாயிகள் எதிர்காலத்தில் பயிர்ச்செய்கையில் ஈடுபடவேண்டுமாயின் சந்தை வாய்ப்பை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார். (ச-இ)

## கடல் வளத்தை விற்பதற்கு இந்த அரசும் முனைப்பு!

### கடற்றொழில் இணையத்தின் பேச்சாளர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 28

வடக்குக் கடலையும் கடல் வளங்களையும் பல் தேசிய கம்பனிகளுக்கு விற்பனை செய்வதற்காக அநுரகுமார அரசாங்கம் பதவி ஏற்றுள்ளதா என இந்த அரசாங்கத்தின் மீது சந்தேகம் எழுந்துள்ளது என்று கடற்றொழில் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் பல் தேசியக் கம்பனிகளுக்கு ஆதரவாகவும் மீனவ சமுதாயத்துக்கு எதிராகவும் கொண்டுவரப்பட்ட சட்டவரைவு மீனவ சமூகங்களின் போராட்டத்தின் விளைவாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

பல்தேசியக் கம்பனிகளுக்கு எதிராக மீனவ சமூகங்களோடு நிற்பேன் என உறுதி அளித்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய சட்டவரைவை கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளது.

சட்டவரைவை நாடாளுமன்றத்துக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. மீனவர்கள் விரும்பாத சட்டவரைவு தொடர்பிலே அதீத கவனம் எடுப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்- என்றார். (ச-125)



## சீனப் பல்கலை மாணவர்கள் ஆய்வுக்காக இலங்கைக்கு

கொழும்பு, டிசெ. 28

ஹொங்கொங் சீனப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 16 இளங்கலை மாணவர்கள் ஆய்வுப் பயணத்தில் ஈடுபடுவதற்காக இலங்கைக்கு 10 நாள் வருகை தந்துள்ளனர்.

இந்தக் குழு நேற்று வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த மாணவர்கள் 'இலங்கையில் பெண்களின் உரிமைகள்' என்ற தலைப்பில் ஆய்வுப் பயணத்தில் ஈடுபட்டு ஆய்வுக் கட்டுரை ஒன்றைத் தயாரிக்க உள்ளனர். (ச-இ)

## காட்டுத் தடிகளை கடத்தியவர்கள் கைது

கிளிநொச்சி, டிசெ. 28

அரச காட்டுக்குள் புகுந்து அனுமதியின்றி பெறுமதிமிக்க ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட காட்டுத் தடிகளை வெட்டிய குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்கள் தருமபுரம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் இருந்து குறித்த தடிகளை கப்ரக வாகனத்தில் சூட்சுமமாக மறைத்து எடுத்துச் சென்ற வேளையில் அவர்கள் சிக்கினர்.

சந்தேகநபர்களை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்துள்ளார். (ச-113)



## கசிப்புடன் பெண் கைது



யாழ்ப்பாணம், டிசெ. 28

கசிப்புடன் பெண்ணொருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளதாக கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைய கோப்பாய் மத்தி பகுதிக்கு விரைந்த பொலிஸார் 1500 மில்லிமீற்றர் கசிப்பைக் கைப்பற்றியதோடு 47 வயதான யுவதி ஒருவரை சந்தேகத்தில் கைதுசெய்தனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மோகன்சிங் மறைவு சஜித், மஹிந்த இரங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.28

இந்தியாவின் முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான மன்மோகன்சிங்தனது 92 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் காலமான நிலையில் இலங்கை அரசியல் பிரமுகர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கலாநிதி மன்மோகன் சிங் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவராக இருந்துள்ளார் எனத் தெரிவித்த எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அவருடைய பொருளாதார சீர்திருத்தங்கள் இந்தியாவை மாற்றியமைத்ததுடன் பிராந்தியத்தை ஊக்கப்படுத்தியது எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மன்மோகன் சிங் ஒரு தொலைநோக்கு பொருளாதார நிபுணர் என்றும் இந்தியாவின் பொருளாதார தாராளமயமாக்கலின் சிற்பி என்றும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனது எக்ஸ் தளத்தில் இரங்கல் வெளியிட்டுள்ளார். (ச-இ)

# மின்சாரக் கட்டணத் திருத்தம்; கருத்துக் கோரல் ஆரம்பம்

கொழும்பு, டிசெ.28

மின்சாரக் கட்டணத்திருத்த யோசனை தொடர்பில் பொதுமக்களிடம் இருந்து வாய்மொழியாக கருத்துகளைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டின் முதல் 6 மாதங்களுக்கு மின் கட்டணத்தைத் திருத்தம் செய்யாமல் பராமரிக்க வேண்டும் என்று சமீபத்தில் மின்சாரசபை முன்மொழிந்திருந்தது.

இது தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, பதில் யோசனைகளை முன்வைத்து, மின்சாரக் கட்டணத்தை 10 முதல் 20 வீதம் வரை குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தது. அதற்கமைய எதிர்வரும் ஜனவரி 10ஆம் திகதி வரை 9 மாகாணங்களையும் உள்ளடக்கி வாய்மொழி கருத்துகளைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பில் பொதுமக்கள் தமது கருத்துகளை தெரிவிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தொலைபேசி இலக்கமான 0772 943 193க்கு தொடர்பு கொண்டு பதிவு செய்ய முடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### பிரதேசசபை கடைகள் வாடகைக்கு வழங்குதல் தொடர்பான 1 வது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட மருதனார்மடம் சந்தைப்பகுதியில் உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்ட நிதியில் (LDSP) அமைக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடைகளினை 03.02.2025ம் திகதி முதல் வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 30.12.2024 - 16.01.2025 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 17.01.2025 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 17.01.2025 வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்

| விபரம் | பரப்பளவு (சதுரஅடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | மாத வாடகை | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது |
|---|---|---|---|---|---|
| **மேற்தளம்** | | | | | |
| கடை இல - 04 | 308 | 2,040,000.00 | 8,500.00 | 2,000.00 | 41,000.00 |
| கடை இல - 06 | 308 | 2,040,000.00 | 8,500.00 | 2,000.00 | 41,000.00 |
| கடை இல - 07 | 308 | 2,040,000.00 | 8,500.00 | 2,000.00 | 41,000.00 |

**நிபந்தனைகள் :-**

1. விண்ணப்பதாரி வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கிராம சேவகரால் உறுதிப்படுத்திய கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை தனித்தனி கடித உறையில் இட்டு "செயலாளர் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு மூலப்பிரதி, இணைப்பிரதி எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
4. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். குறித்த மாத வாடகைப் பணத்தினை ஒவ்வொரு மாதம் 31ம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதக்கட்டணத்தின் 10 வீதம் தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.
5. கேள்விச்சித்திகாரராக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் 31.01.2025ம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைந்த கட்டுப்பணம் முழுத் தொகையையும் ஒரேதடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேசசபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம் / தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
6. சித்தி பெறும் கேள்விதாரர் சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருட்களையோ அல்லது பிரதேசசபையால் அங்கீகரிக்கப்படாத பொருட்கள் மற்றும் மதுபானவகைகளோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்தபொருள்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன், கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
7. சித்திகர குத்தகைகாரர் வலிகாமம் தெற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
8. சித்திகர குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகைத் தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
9. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிம சான்றிதழையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
10. கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமதி சா.உருத்திரசம்பவன்**
**செயலாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

28.12.2024

(CR/43988) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்கள் நியமனம்

கொழும்பு, டிசெ. 28

கிழக்கு மாகாண அரச ஆசிரியர் சேவைக்கு 2024ஆம் ஆண்டுக்கான ஆட்சேர்ப்பின் முதற்கட்டமாக 52 ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நேற்றுமுன்தினம் திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே.குகநாதன், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ், கிழக்கு மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஜே.லியாகத்தலி, கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் எஸ்.ஆர்.ஹசந்தி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-இ)

**நல்லூர் கந்தன் திருமண சேவை**

**எம் அன்பார்ந்த உறவுகளுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்**

எம் திருமண சேவையில் உள்நாட்டு மணமக்கள், வெளிநாட்டு மணமக்கள் உத்தியோகம், உத்தியோகம் இல்லாதது வெளிநாட்டு மணமகள்கள் கைவசம் உள்ளனர். எவ்விதமாயினும் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு: **077 973 3183**

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை

3 மாதகாலத்தில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில By. ந. விக்னேஸ்வரன் ஆச்சார்யார்.

பிரான்பற்று வீதி, குபேரன் கட்டட மாடி, சங்கானை

TEL:- **077 675 1649**

(CS/2115) J-1

**பணிப்பெண் தேவை**

மயிலிட்டியில் தங்கியிருந்து வயோதிபப் பெண்ணை பராமரிப்பதற்கு பெண் பணியாளர் தேவை.

வயதெல்லை - 30 - 45

தொடர்பு:- **077 711 2269**

(CS/2116) J-1

உ
சிவமயம்

**திருவாசக முற்றோதல்**

நவாலி அட்டகிரி சிவன் தேவஸ்தானத்தில் நாளை (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிமுதல் திருவாசக முற்றோதல் நிகழ்வு ஆரம்பமாகி நடைபெறும்.

**சிவஸ்ரீ கா. துரைச்சாமிக்குருக்கள்**
**ஆலய பிரதமகுரு.**

(cs.57055) (N-1)

# மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 02 . 1936

மறைவு 25 . 12 . 2024

## மாணிக்கம் அன்னம்மா (பரிமளம்)

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் தற்பொழுது நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் அன்னம்மா (பரிமளம் - ஓய்வுபெற் ஆசிரியர்) கடந்த 25.12.2024 புதன்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், சபாபதிப்பிள்ளை - தில்லையம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கிருஷ்ணகலாநிதி (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) மற்றும் கிருஷ்ணதயாநிதி (ஓய்வுபெற்ற சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்), காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் றமேஷ்குமார் (கனடா) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற நாகேந்திரநாதன் மற்றும் சத்தியலோகன், மேனகா (கனடா) ஆகியோரின் மாமியாரும், கோபிகன் (கனடா), சாகித்தியன் (கனடா), சயிலுஜா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம்மா, பரமேஸ்வரி, சுப்பிரமணியம், லக்ஷ்மி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 03 பண்டாரக்குளம் மேற்கு வீதி,**
**நல்லூர் வடக்கு,**
**யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**சத்தியலோகன் கிருஷ்ணதயாநிதி**
**குடும்பத்தினர் - 077 477 1218**
**மகன் - றமேஷ்குமார்**
**001 164 737 96641**

(cs 57054) N-1

# முதலாம் ஆண்டு நினைவுதினம்



மண்ணுலகில் 03 . 01 . 1963

விண்ணுலகில் 09 . 01 . 2024

## சிதம்பரநாதர் ஏகாம்பரநாதன் (கிளாக்கர்)

**திதி: மார்கழி மாத அபரபக்க திரயோதசி**

தன் தொழில் மேன்மை கண்டு
பொறாமையால் பொங்கி எழுந்தான்
அடங்காச் சினங் கொண்டே
சதி வலையில் சிக்க வைத்தானே
குடும்பம் தனியிழந்து கதியிழந்து
தரணியில் தவிக்கின்றோமே
ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றென்றும் அகலாதப்பா
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**வரணி,**
**இயற்றாலை.**

**நீங்காத நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

(CR/43982) J-1

# சான்றிதழ்கள் வழங்கல் யாழ்ப்பாணத்தில் இன்று

யாழ்., டிசெ. 28 'டவர்' நாடக அரங்கப் பாடசாலையில், தமிழ் மொழி மூலமான இரண்டு வருட முழுநேர நாடகம், அரங்கக் கலைகளுக்குக்கான உயர் டிப்ளோமா பாடநெறியினை வெற்றிகரமாக முடித்த 44 மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, யாழ். இந்திய கலாசார மத்திய நிலையத் தின் பிரதான மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ. சந்திரசேகர் மற்றும் வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட 'டவர்' நாடகப் பாடசாலை ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், நாடக பாடநெறி விரிவுரையாளர்கள், டிப்ளோமாதா ரர்கள் பெற்றோர் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச-25)

# மரண அறிவித்தல்



பிறப்பு 28.02.1948

இறப்பு 27.12.2024

## திரு. சிவசிதம்பரம் வேலுப்பிள்ளை

காரைநகர், தங்கோடை பொன்னுடையார் வளவை பிறப்பிடமாகவும், இல.99 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு.வேலுப்பிள்ளை நேற்று **(27.12.2024)** வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்ற பொன்னுடையார். வேலுப்பிள்ளை வைத்திலிங்கம் தம்பதியரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், செல்வரஞ்சினியின் அன்புத் தந்தையும், தையல்நாயகி **(Canada),** காலஞ்சென்ற அன்னபாக்கியம், சிவபாக்கியம், சிவயோகம், சிவகுமாரி, இராமச்சந்திரன் (அப்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் தவராசா, பேரம்பலம், சுந்தரலிங்கம், மனோகரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகராசா - சித்திரா, தர்மவர்த்தினி - சற்குணராசா, தர்மவாகினி -கிரிதரன், சிவரூபா - ஹரிகரன், சிறிகரன் - தாட்சாயினி, சிவதர்சினி - கருணாகரன், பிரியதர்சினி - காண்டீபன், சுதாகரன் - மிதுலா, சர்மிளா - செல்லப்பா, சங்கீதா - சதீஷன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வசீகரன் - பிறிஷ்னி ஆகியோரின் அன்பு பெரியதந்தையாரும், ராம், சுருதி, லாவண்யா, ரிஷி, அஸ்வினி, அர்ச்சனா, அருண், அகிலன், அக்ரன், சீயான், மித்திரா, கிஷான், சச்சின், சேயோன், மிஸ்ஷிகா, விகான், அஜேய், பவிஷான், மதுஷான் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **29.12.2024** ஞாயிற்றுக்கிழமை பி.ப.**2.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக யாழ். கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல்: **S.இராமச்சந்திரன்**
**077 391 0667**

# நிலைபேறான அபிவிருத்தி நோக்கிய நிகழ்ச்சித்திட்ட வரவுசெலவுத்திட்டம் - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் பாகம் VI பிரிவு 168(1) இன் மூலம் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2025 ஆம் ஆண்டிற்குரிய நிகழ்ச்சித்திட்ட வரவுசெலவுத்திட்டம் 295/24.12.2024 ஆம் இலக்க நிர்வாக கட்டளை மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

**சோ.மணிவண்ணன்,**
**செயலாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி.**
**27.12.2024**

(cr.43993) (N.1)

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம்
## ஏலவிற்பனை - திருத்தம்

மேற்படி விடயம் தொடர்பாக 24.12.2024ம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனை அறிவித்தலில் எமது சபையின் சுன்னாகம் வாழைக்குலை சந்தையில் குவிக்கப்பட்ட **கட்ட இடிபாடுகள்** என்பது **அகழ்வு செய்யப்பட்ட கண்ட கற்கள்** என திருத்தம் செய்யப்படுகிறது. ஏனைய நிபந்தனைகள் 24.12.2024 பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளவாறு வலுவில் இருக்கும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**திருமதி சாரதா உருத்திரசம்பவன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**
**28.12.2024**

(CR/43986) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 11 . 1942



மறைவு 27 . 12 . 2024

## திருமதி சிவகாமசுந்தரி சண்முகராஜா

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாம சுந்தரி சண்முகராஜா அவர்கள் நேற்று (27.12.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை (ஓய்வுபெற்ற நீதிபதி) - மாருதப்பிரவீகவல்லி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முக ராஜா (K.A எஞ்சினியஸ்) அவர்களின் ஆசை மனைவியும், சிவஞானவல்லி, ஆனந்தகுமாரசாமி, கனகசுந்தரி, Dr. கிருஷ்ணாள், முத்துகுமாரசாமி, பருவதா தேவி, சிவரூபவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற குலேந்திரன் மற்றும் சிவமனோகரி, சிதம்பரநாதன், காலஞ்சென்ற ஜெயராஜசிங்கம் மற்றும் சிவனேஸ்வரி, தர்மலிங்கம், காலஞ்சென்றவர்களான சுரேந்திரன், இராஜலக்சுமி, முத்துலக்ஷ்மி மற்றும் பாக்கியலக்சுமி, காலஞ்சென்றவர்களான சுந்தரராஜா, நவரட்ணராஜா மற்றும் மங்கயற்கரசி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


128, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 025 2341

(CS 2083) A-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 12 . 1947



இறப்பு 27 . 12 . 2024

## செல்லத்துரை வேணுகோபால்

மாதனையை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை வேணுகோபால் நேற்று (27.12.2024) வெள்ளிக்கிழமை காலாமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும், சசிகலா (கனடா), சதீஸ் (LOLC முகாமையாளர்), ரேனுகா (லண்டன்), சோபனா (பிரான்ஸ்), பிருந்தா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிதரன், தட்சாயினி, நிர்மலன், அனுஜன், தினேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

A-1

தகவல்: குடும்பத்தினர்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 23 . 08 . 1941



உதிர்வு 30 . 11 . 2024

கடந்த 30.11.2024 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் சிவலிங்கம் இராசரத்தினம்

(மங்களா ஸ்ரோர்ஸ் பண்டத்தரிப்பு)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.12.2024) சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (30.12.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

மங்களா ஸ்ரோர்ஸ்
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்
077 764 2009

(CS/57053) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 10 . 1954



மறைவு 26 . 12 . 2024

## சோமலிங்கம் மனோகரன்

கிளிநொச்சி பூநகரி செல்லையாதீவைப் பிறப்பிடமாகவும், பூநகரி ஆலங் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமலிங்கம் மனோகரன் அவர்கள் நேற்று முன்தினம் (26-12-2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமலிங்கம்-இரத்தினம் தம்பதியின் அன்பு மகனும், மதியானந்தம் (இந்தியா) அவர்களின் பெறாமகனும், கந்தையா-மகேஸ்வரி (இந்தியா) தம்பதியின் அன்பு மருமகனும், விஜயகுமாரி அவர்களின் அன்புக் கணவரும், றதனி (அவுஸ்திரேலியா), தர்சிகன் (கனடா), றஜாந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரன் (அவுஸ்திரேலியா), சர்மிளா (கனடா), சபேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கோஷித், பிரணயா, பிரணியா, அன்பகன், ஆதித்தன், ஆருத்திரா ஆகியோரின் அன்புப் பேரனும், நாகேஸ்வரி (இலங்கை), இரத்தினவல்லி (இலங்கை), பராசக்தி (இலங்கை), தையல்நாயகி (இலங்கை), சிவயோகன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற தியாகராயா, விஜயகாந்தன் (கனடா), யோகேஸ்வரன் (கனடா), சரோஜினி (சுவிஸ்), காலஞ்சென்ற மகேஸ்வரன், சாந்தினி (இந்தியா), விஜயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஜயகுமார் (லண்டன்), உதயகுமாரி (லண்டன்), காலஞ்சென்ற உதயகுமார், சிவகுமார், சிவகுமாரி (இந்தியா), ராஜ்குமார் (லண்டன்), சதீஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (29-12-2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 1.00 மணியளவில் பூதவுடல் கொள்ளுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலங்கேணி,
பூநகரி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
15.07.1942

மறைவு
27.12.2020

அல்வாயைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாழை
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் ஐயாத்துரை வரதராஜா

B.A, PGDE - S.L.P.S - I
முன்னாள் அதிபர்
யா / உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்

திதி: பூர்வபக்க திரயோதசி

ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்திரண்டில் உதித்த முளை
மொட்டாகி விரிந்து, காயாகி, கனியாகி
எழுபதுகளில் வாசனை பெற்ற போது
ஆசான் எனும் வரம் பெற்றுவிதை பல நாட்டி, உரமிட்டு
நீர் பாய்ச்சி விளைச்சல் பல கண்ட மானிடமே!
கதை பல கூறி வீரவசனம் பேசி
நிலமதிர விவாதம் செய்து வீறு நடை போட்ட வரதராஜா
எழுதுமட்டுவாழில் மணம் முடித்து நான் மக்களைப் பெற்று
நலமுடன் வாழ்ந்த அதிபராம்சேவையில் பொறிபதித்தவரே
சாதனை படைத்தீரே
"தேடுகினம் உமைக் காண"
எங்கைய்யா நீவிர் சென்றீர் எமை விட்டு
நான்காண்டுகள் சென்றாலும்
என்றும் நீங்கள் எம் உயிருள்ளவரை
உள்ளத்தில் பத்திரமாய்..........

"ராஜஸ்தான்"
A9, கண்டி வீதி,
எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ்.

என்றும் மறவா
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(cs 57049) (N-1)


# பயன்படுத்தப்படாத நிலையில் யாழ். தனியார் பேருந்து நிலையம்

## விரைவில் தீர்வு என அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 28

அதிக செலவில் கட்டப்பட்ட யாழ்ப்பாணம் தனியார் பேருந்து நிலையம் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது என்று கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தனியார் போக்குவரத்துத் துறையினருடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கலந்துரையாடலின்போது தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தினர் பல்வேறு பிரச்சினைகளை எமக்கு எடுத்துக் கூறியிருந்தனர். அதில் முக்கியமானது யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய போக்குவரத்தாகும். அந்தப் போக்குவரத்துப் பிரச்சினை என்பது, இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கும் தனியார் போக்குவரத்துத் துறைக்கும் இடையே முரண்பாடாக மாறி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் மிகவும் அதிக செலவில் ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அது இன்றைக்கு ஆளில்லாத அநாதையாக்கப்பட்ட இடமாக உள்ளது. ஆகையால் அதனை மாற்றியமைக்க வேண்டிய தேவை எல்லோருக்கும் உள்ளது.

அந்தத் தேவையை முதன்மைப்படுத்தியதாகவே யாழ்ப்பாணம் மாவட்ட தனியார் போக்குவரத்துத் துறையினரின் கோரிக்கை அமைந்துள்ளது. அது அவர்களின் கோரிக்கை மாத்திரம் அல்ல, அதனை அனைவருடைய கோரிக்கையாகவே நாங்கள் பார்க்கிறோம்.

அந்தவகையில் எதிர்வரும் காலங்களில் இது குறித்து இங்கிருக்கின்ற பிராந்திய போக்குவரத்து ஆணையாளர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் ஏன் இவ்வளவு தாமதப்படுத்தினார்கள் என்று ஆராய வேண்டிய தேவை உள்ளது. அதுபோல எங்களது ஆளுநருக்கும் இது குறித்து தெரியப்படுத்த வேண்டியுள்ளது.

இந்தப் பிரச்சினையை கலந்துரையாடல் மூலம் சுமூகமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என நாங்கள் நினைக்கின்றோம். அதுவும் சாத்தியமாகாத பட்சத்தில் இதுகுறித்து நேரடியாக போக்குவரத்து அமைச்சரோடு கலந்துரையாடி இதற்கு நிரந்தரமான தீர்வைப் பெற்றுக்கொடுப்போம் - என்றார். (அ-ம-27)

# பறக்கும் விமானத்தில் பெண் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 28

டோஹாவில் இருந்து பரிஸ் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த விமானத்தில் திடீரென சுகவீனமடைந்த இலங்கைப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். குறித்த பெண்ணுக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டதால், ஈராக்கின் எர்பில் சர்வதேச விமான நிலையத்தில் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டபோதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவக் குழு தெரிவித்தது. பிரான்ஸில் தங்கியிருந்த 81வயதுடைய இலங்கைப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ச-இ)


## வலிகாமம் வடக்கு பிரதேசசபை
## மயிலிட்டி உப அலுவலகம்
## ஆதனப்பெயர்மாற்ற அறிவித்தல்

விண்ணப்பதாரர் : சின்னராசா பவளராணி

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 05, முலவை வீதி ஆதன இல 15 என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

இவ் வாதனம் சட்டத்தரணி நாகேந்திரன் பார்த்திபன் முகதாவில் 736/29.09.2020 ம் திகதிய உறுதிப்படுத்தலும் பிரகடனப்படுத்தலும் உறுதி மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் நாகேந்திரன் பார்த்திபன் முகதாவில் உறுதி இலக்கம் 1146ம் இலக்கத்தில் 27.10.2022 அன்று நிறைவேறிய நன்கொடை உறுதியின் பிரகாரம் குறித்த சின்னராசா பவளராணி என்பவரை வந்தடைந்தது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பகுதியில் பிரதேசசபை மயிலிட்டி கோவிற்பற்றும் மயிலிட்டி இறையும் "தீராங்கல்லு" நிலப்பரப்பு 01குளி 12.55 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.ஆறுமுகம் அவர்களின் வரைபட இலக்கம் 5506 இன்படி துண்டு 01 ஆகும்

இதன் எல்லைகள்
கிழக்கு-12 அடி அகலமான ஒழுங்கை
வடக்கு- பாதை
மேற்கு தவராஜசிங்கம் சுஜேந்திரன் பெண் வர்சிகா
தெற்கு ஆறுமுகம் கைம்பெண் காந்தியம்மை

மேற்குறித்த ஆதனத்தை சின்னராசா பவளராணி என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செயலாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

(CS/57062) J-1



## மரண அறிவித்தல்



தோற்றம்
18.11.1929

மறைவு
27.12.2024

ராயப்பு மலர்

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ராயப்பு மலர் நேற்று (27.12.2024) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

83/5 சென்பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மகள்-வனிதா

(CS 57058) V-1


# ஹெரோய்னுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்ப்பாணம் , பொம்மைவெளிப் பகுதியில் வைத்து இளைஞனொருவர் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 120 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-27)

# திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ. 28

இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையினரின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை வரலாற்றுப் பிரசித்திபெற்ற நாவற்குழி திருவாசக அரண்மனை சிவபூமி சிவதெட்சணாமூர்த்தி கோயிலில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியுமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நிம்மதியான...

மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்குப் பிரதேச அபிவிருத் திக் குழுக்கூட்டம் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரி விக்கும்போதே, வெடுக்குநாறிமலை யில் தமிழர்களின் வழிபாட்டுச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வெடுக்குநாறிமலையில் வழிபாடுக ளில் ஈடுபடுவதற்கும் சென்று வருவதற் கும் எந்தத் தடையும் இல்லை. உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பின்மூலம் இதை உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால், அங்கு வழிபாடுகளை மேற்கொள்வதற்காக மக்கள் செல்லும்போது, பல்வேறுபட்ட அடக்குமுறைகள் கடந்த காலங்களில் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில், ஆல யத்துக்குச் செல்லும் பாதைகள் சீரமைக் கப்படவில்லை. இவ்வாறான வஞ்சிப்புக் களை இந்த அரசாங்கமும் மேற்கொள் ளக்கூடாது. ஆலயத்துக்குச் செல்லும் பாதைகள் சீரமைக்கப்பட வேண்டும். அத்துடன், ஆலய வளாகத்தில் குடிதண் ணீர் வசதிகள் செய்யப்பட வேண்டும். கடந்த சிவராத்திரி தினத்தன்று வழிபாடு களுக்குச் சென்ற அடியவர்கள் குடிதண் ணீர் இடர்பாடுகளுக்கு முகங்கொடுத் தார்கள். அடியவர்களால் எடுத்துச்செல் லப்பட்ட குடிதண்ணீரைக்கூட பொலி ஸார் பறித்தனர். குடிதண்ணீர் வழங்கா மல்கூட எமது மக்கள் வஞ்சிக்கப்பட்டனர். வெடுக்குநாறிமலை அமைந்துள்ள பகுதி தற்போது வனவளத் திணைக்களத் தின் கட்டுப்பாட்டில் இருப்பதாகச் சொல் லப்படுகின்றது. எனவே ஆலயவளாகம் வனவளத் திணைக்களத்தின் பிடியிலி ருந்து விடுவிக்கப்பட வேண்டும். அந்த ஆலயத்தைப் பதிவுசெய்வதற்கு நடவடிக் கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். அத்துடன், மலை உச்சியில் முன்னர் இருந்ததைப்போன்று சிறிய அளவி லான பாதுகாப்புக் கூடாரத்தை அமைப் பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்" - என்றார். (அ-ம-110-26)

## தமிழரசுக்...

கட்சியின் பதில் பொதுச்செயலாளராகச் செயற்பட்டுவரும் மருத்துவர் சத்தியலிங் கத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தி லேயே, அவர் இவ்வாறு வலியுறுத்தியுள் ளார்.

மாவை அனுப்பிவைத்த கடிதத்தின் சாராம்சமாவது:-

சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரின் பதவி வெற்றிடமானபோது, கட்சியின் தலைவ ரான எனது பரிந்துரையின் அடிப்படை யில் பதில் பொதுச்செயலாளராக சத்திய லிங்கம் தெரிவுசெய்யப்பட்டார். கட்சி யின் பதில் பொதுச்செயலாளர் கட்சித் தலைவரின் அறிவுறுத்தலுக்கு அமை யவே செயற்பட வேண்டும் என்று யாப்பு கூறுகின்றது. ஆனால், கட்சியின் பதில் பொதுச்செயலாளரான மருத்துவர் சத்தி யலிங்கம் எனது ஆலோசனைகளைப் பின்பற்றவில்லை.

அத்துடன், டிசெம்பர் மாதம் 14ஆம் திகதி கூட்டப்பட்ட கூட்டம் தொடர்பில் எனக்கு அறிவிக்கப்படவில்லை. அந்தக் கூட்டம் தன்னிச்சையாகக் கூட்டப்பட்ட கூட்டம் என்பதுடன், எதிர்வரும் 28ஆம் திகதிய கூட்டத்தின் (இன்றைய) நிகழ்ச்சி நிரல் (மாவையின் பதவி விலகல் தொடர்பான வாக்கெடுப்பு) தேவையற்றதொன்று. வாக்கெடுப்பு நடத்தி தலைவர் பதவி யைத் தீர்மானிப்பது என்பது அடிப்படை அற்ற முன்னெடுப்பாகும்.

2024ஆம் ஆண்டின் பொதுத்தேர்தல் அறிக்கையை கட்சித் தலைமையகத்தில் வைத்து நானே தயாரித்தேன். அந்த அறிக்கை எனது இல்லத்தில் வைத்தே, புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட தலைவர் சிறீதரன், பதில் பொதுச்செயலாளர் மற்றும் ம.ஆ.சுமந்திரன், ஆனல்ட் முன்னிலை யில் பத்திரிகைகளுக்கு வெளியிட்டோம். தலைவர்பதவியில் இருந்து விலகுவதாக நான் அறிவித்தபோது, சிறீதரனை தலைமைப் பதவியை ஏற்குமாறு கோரி யிருந்தேன். அது செயற்படுத்தப்படா மையால், நானே கட்சித் தலைவராகத் தொடர்கின்றேன். அத்துடன், பதவி வில கல் கடிதத்தை நான் எழுதிய பின்னர் கூட்டப்பட்ட கூட்டங்கள் சிலவற்றில் கட் சித் தலைவர் என்ற ரீதியிலேயே எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனபடி யால் நானே கட்சியின் தலைவர் பதவி யில் தொடர்ந்தும் செயற்படுகின்றேன் - என்றவாறாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-26)

## ஐ.தே.க.வை...

கின்றனர். அவ்வாறான செயற்பாடுகள் மூலம் கட்சியை அழிப்பதற்கு இடமளிக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பி னர் ரவிகருணாநாயக்க தெரிவித்துள் ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஒரு சிலரின் தனிப்பட்ட தேவைக்காக கட்சியை அழிக்க இடமளிக்க முடியாது. மக்களின் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை பாதுகாக்க வேண்டும். கட்சியை விட்டுச் சென்றவர்களும் மீள வரவேண் டும். ஒரு சிலருக்காக எமது கட்சியை பணயக் கைதியாக பயன்படுத்த இடம ளிக்க முடியாது. நாட்டில் பெரிய மாற்றங் களை ஏற்படுத்திய கட்சியே ஐக்கிய தேசியக் கட்சியாகும். அந்தக் கட்சியை பழைய நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும்" - என்றார். (அ-ம-44)

## 18,602...

மற்றும் பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து அடையா ளப்படுத்தப்பட்ட பயனாளிகளுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா, 4 ஆயிரத்து 250 ரூபா, 5 ஆயிரம் ரூபா, 7 ஆயிரத்து 500 ரூபா, 8 ஆயிரத்து 500 ரூபா, 15 ஆயிரம் ரூபா என கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

## புலனாய்வுப்...

பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றபோதே, இந்தக் கோரிக்கை தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு, அது நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (அ-ம-110)

## இராணுவ...

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர் பில் பொதுமக்கள் சிலர் தெரிவித்ததா வது:-

வவுனியாவில் உள்ள கால்நடை வளர்ப் போர் மற்றும் பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரைகள் இல்லாமல் தமது கால்நடைகளைப் பராமரிக்க பெரும் சிரமப்பட்டு வருகின்றனர். மேய்ச்சல் தரைகளை அமைக்குமாறு பல தடவை கள் கோரப்பட்ட போதிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

வவுனியாவில் உள்ள பெரும் காடுகளில் ஏக்கர் கணக்கான காணிகளை அழித்து இராணுவத்தினர் முகாம்களை அமைத் துள்ளனர். ஆனால், மேய்ச்சல் தரை களை அமைப்பதில் ஆர்வம் காட்டப்ப டாமை ஏமாற்றமளிக்கின்றது. நாட்டின் பொருளாதாரத்துக்குக் கால்நடை வளர்ப்பு பிரதான பங்களிக்கின்றது. இவ் வாறிருக்கையில், கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளை அமைப்பதில் அக்கறையற்று அதிகாரிகள் இருப்பது மிகவும் தவறான விடயம் என்றனர்.

இதையடுத்து, குளங்களின் அரைக ரைப் பகுதிகளில் மேய்ச்சல் தரைகளை அமைப்பது தொடர்பில் பரிசீலிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய நாடாளு மன்ற உறுப்பினர் செ.திலகநாதன், அரச காணிகளை அடாத்தாகப் பிடித்து வைத்திருப்பவர்களிடம் இருந்து அந்தக் காணிகளை மீட்டு மேய்ச்சல் தரைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (அ-ம-110)

## அத்துமீறிய...

கொண்டபோது இலங்கை - இந்திய மீன வர்களிடையே ஒரு மனிதாபிமான தீர்மா னம் எட்டப்பட வேண்டும் என்று கூறப்பட் டது. அந்தத் தீர்மானத்துக்கான கலந்து ரையாடல் எப்போது எங்கிருந்து ஆரம் பிக்கப்படும்?' என அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதன்போதே, அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் எந்தவொரு சமரசப் பேச்சு வார்த்தைக்கும் இடமில்லை என்று அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள் ளார்.

மீனவர்களுக்கு இடையிலான சமரசப் பேச்சுவார்த்தை எல்லாம் முடிந்துவிட்டது. இனி பேச்சுவார்த்தை எதுவும் இல்லை. மீன்பிடி அமைச்சில் இருக்கின்ற அதிகா ரிகளுக்கும் இந்தியாவில் இருக்கின்ற அதிகாரிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் இடம்பெறுகின்றன. அந்த பேச்சுவார்த்தைகள் தொடரும். அதில் தொழில்நுட்ப ரீதியான பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் பேசப்படுகின்றன. மனிதாபிமான உதவி களை வாங்குவதோ அல்லது கொடுப் பதோ தொடர்பாக ஒரு பேச்சுவார்த் தைக்கு நாங்கள் செல்லப்போவதில்லை என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள் ளார். (அ-ம-26)

## நாணய...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்த னைகளை ஏற்கமாட்டோம் எனக் கூறி வந்த அரசாங்கம் தற்போது சர்வதேச நாணயநிதியத்தின் தேவைக்கேற்பவே செயற்பட்டுவருகின்றது. அவ்வாறு செயற் படவேண்டாம் என அரசாங்கத்தை வலி யுறுத்துகின்றோம்.

தற்போதைய அரசாங்கம் பொய்யு ரைத்தே ஆட்சியை பிடித்துள்ளது. தற் போது நீதிமன்ற உத்தரவுகளும் மீறப்ப டுகின்றன. நீதிமன்ற உத்தரவுக்கமை யவே ஊடகவியலாளர் சமுதித்தவுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பாதுகாப்பு தற்போது நீக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவுக்கமைய இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அல்லது கைவிடப்பட்டு சட்டம் பயன்படுத்தப்பட்டதா? என்பது பற்றி அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். நாட்டு மக்கள் எதிர்காலத்தில் விளக்குமாறை கையில் எடுக்கும் வகை யில் அரசாங்கம் செயற்படக்கூடாது" - என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது, விளக்குமாறையும் சீலரத்ன தேரர் எடுத்துவந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## 91 விவசாயிகளுக்கு...

கத்தில் இடம்பெற்றது. இதன்போதே, கிளி நொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 91 விவ சாயிகளுக்கு 25 மில்லியன் ரூபா ஒதுக் கப்பட்டுள்ள தகவல் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதுவரையான காலப்பகுதியில் 10 பய னாளிகள் வங்கிகளில் இருந்து கடன் களைப் பெற்றுக் கொண்டுள்ளனர். இதே வேளை ஏனைய பயனாளிகளுக்கான கட னுதவி விண்ணப்பப் படிவம் வங்கிகளின் தலைமையகத்துக்கு அனுமதிகோரி அனுப்பப்பட்டுள்ளன. (அ-ம-125)

## தேசியப்...

ஹினிதும சுனில்செனவி தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. இதன்போதே, தேசிய தைப்பொங்கல் விழாவை எதிர்வரும் ஜனவரி மாதம் 18ஆம் திகதி தெல்லிப்பழையில் நடத்து வது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## மத்திய...

லேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவின் பதவி வில கல் கடிதத்தை ஏற்பதா? இல்லையா? என்பது தொடர்பான வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ள நிலையிலேயே, பார் வையாளர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவோ அல்லது விவாதங்களில் பங்கெடுக்கவோ முடியாது என்று கட்சி யின் துணைத்தலைவர் கூறியுள்ளார்.

அத்துடன், தனது பதவி விலகல் கடி தத்தை மாவை கைவாங்கியுள்ள நிலை யில், அவரின் பதவி விலகல் கடிதம் மீதான வாக்கெடுப்பு தேவையற்றதொன்று என்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப் பினரும், தமிழரசுக் கட்சியின் துணைத் தலைவருமான மருத்துவர் சிவமோகன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய குழு உறுப்பினர்கள் மீது, மத்திய குழு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க யாப்பின் பிரகாரம் அதிகாரம் இல்லை. அதனையும் மீறிய வகையில், மத்திய குழு உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நாடாளுமன்ற முன் னாள் உறுப்பினர்கள் பலர் ஊடகங்க ளில் பொய்களைப் பரப்பி வருகின்றனர் என்றும் தனது கடிதத்தில் சிவமோகன் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-26)

## தமிழரசின்...

இருந்து விலகுவதாக மாவை சேனாதி ராஜா அறிவித்த கடிதத்தை ஏற்றுக் கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்துவதற்கா கவே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் இன்று இடம்பெற வுள்ளது.

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவி தொடர்பில் நீண்டகாலமாகப் பரபரப்பு நிலை தொடர்கின்ற நிலையில், இன் றைய மத்திய குழுக்கூட்டம் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு : 17.03.1939 இறப்பு : 09.01.2024

## அமரர் முருகன் வீரசிங்கம்

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"
(திருக்குறள் - 236)

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஆண்டு ஒன்று சென்றாலும் கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி - இன்பதேவி
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

கைதடி மத்தி குமரநகர்,
கைதடி. (cr.43929 (N-1)

# புதிய காற்றுச் சுழற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 28

இந்தோனேஷியாவின் பண்டா அச்சே தீவுகளுக்கு மேற்காக காற்றுச் சுழற்சி ஒன்று உருவாகியுள்ளது. இது அடுத்த சில நாட்களில் மேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது எதிர்வரும் 30ஆம் திகதி இலங்கையின் தென் கிழக்குப் பகுதியை அண்மித்து இலங்கையின் கீழாக நகருமென எதிர் பார்க்கப்படுகிறது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தற்போது இந்தோனேசியாவின் சுமாத் திரா தீவுகளுக்கு கீழே தெற்கு இந்து சமுத்திரத்தில் ஒரு புயலும் ஒரு தாழமுக் கமும் அருகருகாக ஒரே அகலக் கோடு களில் நிலவுவதால் மேலே குறிப்பிட்ட காற்றுச் சுழற்சி தீவிரமாக வலுவடை யாது. இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் எந்த ஒரு பகுதிக்கும் தற்போதைய நிலையில் எத்தகைய பாதிப்பும் ஏற்படாது.

ஆனால், எதிர்வரும் 2ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்க ளின் சில பகுதிகளுக்கு மிதமானது முதல் சற்றுக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அதேவேளை 29ஆம் திகதி முதல் இலங்கையின் கிழக்கு மற்றும் தென்கிழக்கு கடற்பகுதி கள் கொந்தளிப்பான நிலையில் காணப் படும் என்பதனால் மீனவர்கள் குறிப்பாக கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பகுதி மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது. வடக்கு கடற்பகுதிக ளும் மேற்குறிப்பிட்ட நாட்களில் சற்றுக் கொந்தளிப்பான நிலையில் காணப் படும். ஆகவே, மேற்கூறிய நாட்க ளில் வடக்கு மீன வர்களும் அவதா னமாக இருப்பது அவசியம்" - என் றார். (ம-66)

## Vesta Food & Beverages
## வேலையாட்கள் தேவை

மென்பான நிறுவனம் ஒன்றிற்கு **Office Clerk** (பெண்)
வயது எல்லை: 30 தொடக்கம் 55.
முன்அனுபவம் விரும்பத்தக்கது மற்றும் உற்பத்தி பகுதி ஊழியர்கள் உடனடியாக தேவை.
தொடர்புகளுக்கு: **021 221 3788**
**077 5833 045**
(CS 2118) A-1

## மரண அறிவித்தல்



### திருமதி பிரேமாவதி தவேந்திரராசா

**(ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர் கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)**

செங்குந்தர் வீதி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரேமாவதி தவேந்திரராசா அவர்கள் நேற்று (27.12.2024) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு சுப்பிரமணியம் மற்றும் புனிதவதி தம்பதியரின் மகளும், நடராசா தவேந்திரராசாவின் மனைவியும், தவேந்திரராசா டினேஷின் (சட்டத் தரணி) தாயாரும், சண்முகாயினியின் (சட்டத்தரணி) மாமியாரும், ஜெகதீபன் பிரேமகலா (பிரான்ஸ்) மற்றும் சுப்பிரமணியம் பிரேமன் (அதிபர்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப.10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: த.டினேஸ் (மகன்)
077 3975 105

(CS 2121) A-1


WE ARE HIRING

எமது நிறுவனத்திற்கு பாதுகாப்பு பணியாளர் தேவை.

**SECURITY OFFICER**
பாதுகாப்பு பணியாளர்

சம்பளம் 45000/-
வேலை நேரம் 12 மணித்தியாலங்கள்
EPF ETF

தேவையான பத்திரங்கள்
- GS இடமிருந்து நற்சான்றிதழ் பத்திரம்.
- தேசிய அடையாள அட்டை பிரதி பத்திரம்.



Northway Family Mart
184, Palaly road, Thirunelvely.
Uppumadam Junction, K.K.S road, Kondavil.
northwayfamilymart18@gmail.com

# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடி மெயின்றோட்டுடன் 30 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 1 1/2, 2 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப்பாதையுடன் நிலப்பரப்பு. மேட்டுநிலம், நன்னீரூற்று
- UDA அனுமதி, பிரதேசசபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
- பரம்பரை ஆவணம்.
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் பிற்பகல் 1.00 மணி வரை. பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 மணி வரை

(CS(57061) J-1)

குரு :- **076 069 1105, 076 298 1105**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.